ஆணையர் (வணிகவரிகள்)
31 MAR 2023
எழிலகம், சென்னை-600 005.

E-4450940
31/3

**சுருக்கம்**

பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - வணிகவரித்துறை - வணிகவரி ஆணையர் அலுவலகம் - திரு. நா.மணிகண்டராமன் என்பவர் கருணையடிப்படையில் 29.08.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணிநியமனம் - பணி வரன்முறை செய்து - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை**

**அரசாணை (டி) எண்.72** **நாள்: 28.03.2023**

**சுபகிருது, பங்குனி-14,**

**திருவள்ளுவர் ஆண்டு, 2054**

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. வணிகவரி ஆணையர் அலுவலக கூடுதல் ஆணையர் (நிர்வாகம்) (மு.கூ.பொ), அவர்களின் செயல்முறை எண்.ஒய்3/46234/2019, நாள் 26.08.2020.
3. முதன்மைச் செயலாளர்/வணிகவரிஆணையரின் கடித எண்.ஒய்-3/46234/2019, நாள் 05.07.2022.

*****

ஆணை:

வணிகவரித் துறையின் வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்தபோது 27.10.2019 அன்று மறைந்த திரு. ரா.நாராயணன் என்பவரின் மகன் திரு. நா.மணிகண்டராமன் என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கக் கோரி 11.12.2019 அன்று விண்ணப்பித்துள்ளார் என்றும், விண்ணப்பம் அரசு ஊழியர் இறந்த நாளிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் பெறப்பட்டுள்ளது என்றும், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குவதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து சான்றுகள்/ ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில், மறைந்த அரசு ஊழியரின் மகன் திரு. நா.மணிகண்டராமன் என்பவர்

பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்பதால் இளநிலை உதவியாளர் பதவிக்கு தகுதியானவர் எனவும், இதன் காரணமாக மனுதாரரின் கோரிக்கை நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி பரிசீலனை செய்யப்பட்டு மேலே இரண்டில் படிக்கப்பட்ட கூடுதல் ஆணையர் (நிர்வாகம்) (மு.கூ.பொ), சேப்பாக்கம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி திரு. நா.மணிகண்டராமன் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும், இதன் தொடர்ச்சியாக, தனியர் 29.08.2020 முற்பகல் முதல் வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் பணித்தரத்தில், தனியர் பணியில் சேர்ந்த நாளான 29.08.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேற்காணும் முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையரின் கருத்துருவைப் பரிசீலித்ததில் திரு.நா.மணிகண்டராமன் கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்வதற்குத் தேவையான வயது மற்றும் குறைந்தபட்ச கல்வித்தகுதியான, இடைநிலைக்கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார். மேலும், தனியரின் பணிவரன்முறை தொடர்பான அனைத்து ஆவணங்கள் / சான்றுகள் சரிபார்க்கப்பட்டதில், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் தனியர் பூர்த்தி செய்துள்ளார்.

3. எனவே வணிகவரித் துறையில், வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்தபோது 27.10.2019 அன்று மறைந்த திரு.ரா.நாராயணன் என்பவரது மகன் திரு. நா.மணிகண்டராமன் என்பவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், வணிகவரித் துறையில், வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு, அவர் பணியில் சேர்ந்த நாளான 29.08.2020 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணி வரன்முறைப்

படுத்தப்படுவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகை பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.498/ட்டி1/2023-1, நாள் 09.02.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.4259444/ஜி1/2023, நாள் 20.03.2023 ஆகியவற்றில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**பா.ஜோதி நிர்மலாசாமி**
**அரசு செயலாளர்**

<u>பெறுநர்</u>:

திரு. நா.மணிகண்டராமன், இளநிலை உதவியாளர்,
வணிகவரி ஆணையர் அலுவலகம், சென்னை-5.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5 வழியாக)
முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5 வழியாக)

<u>நகல்:</u>

இணை ஆணையர் (நிர்வாகம்),
முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை - 9.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை - 9.
அரசுச் செயலாளரின் தனிச் செயலர்,
வணிகவரி மற்றும் பதிவுத் துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

28/3/2023
பிரிவு அலுவலர்